**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**
**THIRUVALLUR AT POONAMALLEE**

SESSIONS CASE NO. 14/2020

Deposition of Witness for prosecution: P.W.3

solemnly by S. Ramanujam, Translator

Name : Suriyadevan Caste:

Father's Name : Ramesh Calling :

Village : Religion:

Taluk : Age:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872

on: 11.04.2022

முதல் விசாரணை:-

நான் தற்போது பெருமாள் கோவில் தெரு, கோலப்பன்சேரி வசிக்கிறேன். தற்போது எலெக்ரிஷன் மற்றும் பிளம்பராக இருக்கிறேன். வழக்கில் இறந்த மோட்டுவை என்கு தெரியும் சாட்சிகள் பிரியா வசந்தன் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை பார்த்திருக்கிறேன். 19.11.2018அன்று பரிவாக்கம்,கங்கையம்மன் கோவில் பக்கத்தில் நான், இறந்துபோன மோட்டு,. வசந்த். அருள்மணி, சுனில் மற்றும் சின்ன பசங்க சுமார் மதியம் 1.30லிருந்து 2.30 மணியளவில் ஊட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு 5, 6 நபர்கள் வந்தார்கள். அவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலும். ஆஜர் எதிரிகள்தான் அந்த நபர்கள். வந்த 5 பேரில் ஒரு ஆள் மொபைல் போனை உங்களிளல் ஒருவர் பிடிங்கி கொண்டுவந்துவிட்டார்கள் என்று ரோஸ் சட்டைய போட்ட நபர் (பூபாலன்) சொன்னார். நாங்கள் அவ்வாறு யாரும எடுத்து வரவில்லை என்று சொன்னோம். அதற்கு அவர் நீங்களாக ஒத்துக்கொண்டால் ஒன்றும் இல்லை. இல்லாவிட்டால் பிரச்சனையாகிவிடும் என்று சொன்னார். அப்போது பேசிக்கொண்டிருந்தபோது பின்னாடி இருந்து ஒரு நபர் சபீர் என்பவர் இரும்பு ராடால் மோட்டுவை தலையில் பின் மண்டையில் நோக்கி அடித்தார்.

அந்த ராடை என்னால் அடையாளம் காட்ட இயலும். சா.பொ.2 ராடல் தான் அடித்தார். அதன் பிறகு பூபாலன் கத்தி எடுத்து வீசி எங்களை போகச்சொன்னார்கள். பயந்துபோய் 10, 15 மீட்டர் ஓடிவிட்டோம். போனவேகத்தில் திரும்பிச்சென்றோம் மோட்டு தலையில் அடிப்பட்டு கிடந்தார். இடது பக்கம் காதின் மேல் புறம் ஒரு வெட்டு இருந்தது. நான் தான் போலிசாருக்கு தகவல் சொன்னேன். மோட்டு சம்பவ இடத்திலே இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

<u>4ம் எதிரி தரப்பில் கு.வி.</u> =

கோலப்பன்சேரிக்கும் பாரிவாக்கத்திற்கும் சுமார் 1.30 கி.மீ தூரம் இருக்கும். என் சொந்த ஊர் மதுரைக்கு பக்கத்தில் சாத்தக்குடி. 9 முதல் 10 மணியளவில் நானும் மோட்டு மற்றும் இதர சகாக்கள் கங்கையம்மன் கோவில் பக்கத்தில் செல்லவில்லை. கொல்லாபுரியம்மன் கோவில் அந்த இடத்தில இல்லை. மெயின் ரோட்டில் தான் உள்ளது. நாங்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த இடம் கொல்லாபுரியம்மன் கிடையாது என்றால் சரிதான். போலிசார் நான் கொடுத்த தகவலின் பேரில் என்னிடம் ஒரு புகார் வாங்கினார்கள். அந்த புகாரை நானே எழுதிக்கொடுத்தேன். அது நீதிமன்றத்தில் உள்ளதா என்ற விவரம் என்க்கு தெரியாது. அதன் பேரில் வழக்கு ஏதும் பதிவு செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சத்தம் போட்டு யாரையும் உதவிக்கு அழைக்கவில்லை. அந்த சமயத்தில் யாரும் அங்கு இல்லை. நாங்கள் தண்ணியடிக்க போகவில்லை. நான், வசந்த் மற்றும் அருண் குமார் ஆகியோரை 19.11.2018 இரவு முதல் 20.11.2018 காலை வரை போலிஸ்டேசனில் வைத்து விசாரித்தார்கள். எதிரிகளை நான் போலிசார் சொல்லி தான் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரியல்ல. அவர்கள் தனிப்பட்ட முறையில் பெயரோ விளாசமோ அவர்களைப்பற்றிய விவரங்களை எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்பு அவர்களை நான் பார்த்தில்லை. சம்பவத்திறகு பின்பும் அவர்களை பார்க்கவில்லை தற்போது தான்

நீதிமன்றத்தில் பார்க்கிறேன். எதிரிகள் பெயர் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. பாலாஜி என்ற நபரை தெரியாது. அந்த பெயரும் தெரியாது. அவர் யார் என்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட இயலாது என்றால் சரிதான்.

**5ம் எதிரி தரப்பில் கு.வி.—**

சம்பவிடம் ஒரு ஒதுக்குபுறமான பகுதி என்றால் சரிதான். ஆள் நடமாட்டமும் குறைவாக இருக்கும் என்றால் சரிதான். இறந்த மோட்டு எனக்கு சாதாரணமாக தான் தெரியும். நெறுங்கிய பழக்கம் இல்லை. நான் போலிசார் விசாரணையில் எதிரிகளின் உடைகள் மற்றும் அங்க அடையாளங்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை. போலிசார் வாக்குமூலத்திலும் யார்யார்ரை சேர்த்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 5ம் எதிரியின் பெயர் மற்றும் விளாசம் தெரியாது. தற்போது தான் பார்க்கிறேன். சம்பவத்தின் போது நான் இல்லை என்றாலும் நான் அதே பகுதியில் வசித்துவந்த ஒரே காரணத்தினால் போலிசார் என்னை இந்த வழக்கில் பொய்யாக சாட்சியாக அழைத்துவந்துள்ளாகள் என்றால் சரியல்ல.

1,2,3 மற்றும் 6 எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்குவிசாரணையும் செய்யப்படவில்லை. அ.சா.3ன் சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை இல்லை.

**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**
**THIRUVALLUR AT POONAMALLEE**

SESSIONS CASE NO. 14/2020

Deposition of Witness for prosecution: P.W.2

solemnly by S. Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| Name | : Vasanth | Caste: | |
| Father's Name | : Elumalai | Calling : | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872

on: 11.04.2022

முதல் விசாரணை:-

நான் தற்போது கோயம்பேடு, நியு காலனி, 9 வது தெரு, எண்.39/21 என்ற விளாசத்தில் வசிக்கிறேன். இதற்கு முன் அதே இடத்தில் 10 தெரு, எண். 21 ல் குடியிருந்தேன். நான் தற்போது வானகரம் மீன் மார்கேட்டில் கூலிவேலை பார்கிறேன். இந்த வழகில் இறந்து போன மோட்டு என்ற சத்தியகிரியை எனக்கு தெரியும். அ.சா.1 பிரியாவையும் தெரியும். ஆஜர் எதிரிகளை நான் பார்திருக்கிறேன் எனக்கு தெரியும். தேதி எனக்கு நினைவில்லை. 11 மாதம் 2018ல் திங்கட்கிழமை சம்பவம் நடந்தது. எனக்கு தேதிமட்டும் தான் நினைவில்லை. நான் காலையில் சுமார்.9 அல்லது 10 மணியிருக்கும். மோட்டு வீட்டில் இருந்து வெளியே வந்தோம். பக்கத்தில் ஒரு கொல்லாபுரியம்மன் கோவில் இருக்கிறது. அந்த கோவிலுக்கு குளம் உண்டு. அந்த குளத்திற்கு பக்கத்தில் நிழலில் நான், மோட்டு, சூரியதேவன், அருண், அரிகரின், மற்றும் 4பேர் உட்கார்ந்திருந்தோம். அவர்கள் பெயர் தெரியவில்லை. நான் அந்த இடத்தில் சுமார் 1 மணிநேரம் உட்கார்ந்திருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகளிள் பூபாலன், சாபீர் மற்றும் வெள்ளை சட்டை போட்ட அண்ணன் ( பாலாஜி) ஆகியோர் முதலில் விருவிரு என்று நடந்து வந்தார்கள். போனை காணோம்

என்று கேட்டார்கள். உங்கள் கும்பளில் உள்ள ஒருவன் தான் அதை எடுத்து வந்தான் அவனை தான் தேடிவந்தோம் என்று சொன்னார்கள். பூபாலன் தான் எங்களை பார்த்து போன் எடுத்தவன் இந்த கும்பளில் தான் இருக்கிறான் என்று சொன்னார். அப்போது மோட்டு நான் இருக்கும் போது எப்படி அது நடக்கும் எல்லோரும் இங்கே தானே உட்கார்ந்து இருக்கிறோம் எப்படி அது நடக்கும் என்று கேட்டார். அப்போது பூபாலனுக்கு இடதுகையோ அல்லது வலது கையோ உடைந்து இருந்தது சரியாக நியாபகம் இல்லை. பூபாலன் இடுப்பில் இருந்து கத்தியை எடுக்கபோனார். அப்போது அந்த கத்தியை கைப்பிடியை பார்த்தவுடன் மோட்டுவுடன் இருந்தவர்கள் ஓடிவிட்டார்கள். நான், அரிகரன், சூரியதேவன் மற்றும் அருண் ஆகியோர் மோட்டுவுடன் இருந்தோம். அப்போது சூரியதேவன் ஏன்டா கத்தியை எடுக்கிறாய் என்று கேட்டபோது சபீர் பாய் இரும்பு ராடால் மோட்டுவின் பின் தலையில் அடித்துவிட்டார். அந்த ராடை பார்தால் அடையாளம் காட்டுவேன். கொஞ்சம் மொத்தமான ராடு. கத்தியையும் அடையாளம் காட்டுவேன் . ஆனால் என் முன் உள்ள கத்தியல்ல. சபீர் அடித்தவுடன் மயக்கமான மோட்டு கிழே விழுந்துவிட்டார். பூபாலன் கத்தியை எடுத்து பின் மண்டையிலேயே வெட்டினார். அப்போது பயத்தில் சுமார் 10 மீட்டர் தொலைவில் நாங்கள் ஓடிவிட்டோம். அப்போது எல்லோரும் கும்பலாக வெட்டினார்கள். மீதம் உள்ளவர்கள் ஆட்டோவை ரோட்டில் பார்க் பன்னிவிட்டு வந்தவர்கள். நானும் சூரியதேவன் மற்றும் அருண் ஆகியோர் வெட்டியவர்களை துரத்தி சென்றபோது ஆட்டோ யூடர்ன் எடுத்து வேகமாக சென்றுவிட்டார்கள். மோட்டு சம்பவ இடத்திலே இறந்துவிட்டார். மோட்டுவிற்கும் எதிரிகளுக்கும் எதுவும் தகராறு இருந்ததா என்று எனக்கு தெரியல்லை. ஆட்டோஸ்டெர்ண்ட் பூஜைக்கு போகும் போது பெண்காட்டேரி, சபீர் மற்றும் பூபாலன் ஆகியோர் மோட்டுவை குறுகுறுவென்று பார்த்தார்கள். ஆட்டோ எண் எனக்கு தெரியாது. ஆனால் அது பெண்காட்டேரி ஓட்டிய ஆட்டோவாகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் சொந்த ஊர் முகப்பேர். நான் 4 வருடங்களாக மீன் கடையில் வேலைபார்க்கிறேன். அதற்குமுன் சும்மா இருந்தேன். நான் பூந்தமல்லிக்கு பஸ்ஸில் தான் வருவேன். அங்கிருந்து பாரிவாக்கும் பஸ்ஸில் செல்வேன். சினேகா சூப்பர் மார்கெட் மற்றும் அரசு தொடக்கபள்ளி பின்புறம் கொல்லாபுரியம்மன் கோவில் இருக்கிறது. மாரியம்மன் கோவில் தெரு வழியாக தான் கொல்லாபுரியம்மன் கோவிலுக்கு பாட்டை வழியாக செல்ல முடியும். அந்த பாட்டையில் ஆட்டோ போகும். கொல்லாபுரியம்மன் என்ற பெரில் நான் சொன்ன இடத்தில் ஒரு கோவிலே இல்லை என்றால் சரியல்ல. அந்த கோவிலுக்கு வேறு பெயர் உண்டு அது என்ன பெயர் என்று எனக்கு தெரியாது என்றால் கெல்லாபுரியம்மன் என்று தான் ஊரே சொல்லும். சம்பவம் நடக்கும் போது நாங்கள் கூச்சல் போட்டு மற்றவர்களை அழைத்தோம் யாரும் வரவில்லை. நான், சூரியதேவன் மற்றும் அருண் ஆகியோர் மோட்டுவை எதிரிக்ளை தாக்கியதாக சொல்லப்படும் நேரத்தில் அவர்களை தடுக்கவிலலை என்றால் பேசிக்கொண்டுதானே இருக்கிறார்கள் என்று சும்மா இருந்துவிட்டோம். நான் 10 மீட்டார் துரத்தில் பார்க்கும் போது எதிரிகள் மோட்டுவைத்தாக்கினார்கள் என்றாலும் யார் யார் என்ன ஆயுதத்தால் தாக்கினார் என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. என்னை சம்பவிடத்தில் போலிசார் விசாரித்தார்கள். பின்பு இரவு கஸ்டடியில் வைத்து விசாரித்து காலையில் விட்டுவிட்டார்கள். அப்போது சூரியதேவன், அருனுமம் என்னுடம் கஸ்டடியில் இருந்தார்கள். சம்பவ இடத்தில் போலிசார் எந்த பொரு ளும் எடுக்கவில்லை. என்றை தேதியில் நாங்கள் மது அருந்திருந்தோம். நாங்கள் மது அருந்திய மதுபட்டடில், டம்பளர், சைடீஸ் ஆகியவற்றை போலிசார் எடுத்து சென்றார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. மெயின் ரோட்டில் நிறுத்திருந்த ஆட்டோ பற்றி விவரம் எனக்கு தெரியது என்றாலும் அதில் யார்யர்ா சென்றார்கள் என்றவிவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் போன வேகத்தையும் யார்யார் போனார்கள் என்ன விவரத்தையும் சிசிடிவி புட்டேஜிலும் இருக்கிறது. அந்த சிசிடிவி புட்டேஜை

போலிசார் எடுத்து சென்றுவிட்டார்கள். நான் சம்பவிடத்தில் இருந்திருந்தால் நீதிமன்றத்தில் ஆயுதங்களை காண்பித்துரக்கும் என்றாலும் அவ்வாறு நான் இல்லை என்பதால் நான் அவ்வாறு காண்பிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரு வெள்ளை சட்டை (பாலாஜி) நபரின் பெயர் தெரியாது என்றாலும் சம்பவத்திற்கு முன் அவரை பார்த்ததில்லை என்று சொன்னால் சரிதான். எங்களை போலிசார் 19 மற்றும் 20.11.2018அன்று இரவு முபவதும் காவலி நிலையத்தில் விசாரித்து எங்களை தான் குற்றம் செய்யதவர்கள் என்று முடிவு செய்ததாகவும் போலிசார் சொல்வது போல நாங்கள் சாட்சி சொல்ல தயாராக இருப்பதாக சொன்னதன் பேரில் தான் போலிஸிக்கு ஆதரவாக பொய் சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பாக்கவில்லை என்றாலும் அந்த விவரம எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>5ம் எதிரி த.கு.வி.</u>

இறந்துபோன மோட்டுவை எப்போது தெரியும யார் மூலமாக தெரியும் எத்தனை நாட்களாக தெரியும் என்ற விவரத்தை நான் போலீஸ்விசாரணையில் சொல்லவில்ரை என்றால் சரிதான். நானும் மோட்டுவும் பார்க்கும் தொழில் வேறு வேறு என்றால் சரி. மோட்டு தினம் தினம் யார் யாருடன் தொடர்புவைத்திருப்பார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்று நான் போலிஸில் சொல்லவில்லை. அன்றைய தினம் மோட்டுவை கோயம்பேடுவில் இருந்து வந்ததாக சொல்லியுள்ளேன். எவ்வாறு வந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் மது அருந்தினோம். ஆனால் அதற்கான காலிபாட்டில்களையோ, அதற்குண்டான இதரபோருட்களையோ, பிள்ளையோ, போலிசார் விசாரணையில் நான் தரவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வாக்குமூலத்தில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ஆனால் அதில் உள்ளதை போலிசார் படித்து காண்பித்தார்கள். சம்பவிடத்திற்கு சுமார் 1 மணிநேரத்தில் போலிசார் வந்தார்கள். பதற்றமாக இருந்ததால் உடனடிகாக காவல் நிலையத்திற்கு தகவல் சொல்ல

இயலவில்லை. இரவு விசாரணையின் போது எனக்கு மது போதை இல்லை. ஜார்ஜ் பாபு யார் என்று எனக்கு தெரியாது. அவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,2,3 மற்றும் 6 எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்குவிசாரணையும் செய்யப்படவில்லை. அ.சா.3ன் சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை இல்லை.

**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**
**THIRUVALLUR AT POONAMALLEE**

SESSIONS CASE NO. 14/2020

Deposition of Witness for prosecution: P.W.1

solemnly by S. Ramanujam, Translator

| | | |
|---|---|---|
| Name | : Priya | Caste: |
| Father's Name | : | Calling : |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on: 11.04.2022

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பூந்தமல்லி, பாரிவாக்கும், மாரியம்மன் கோவில் தெரு, வீட்டு எண் 6/49 என்ற விலாசத்தில் வசிக்கிறேன். இந்த வழக்கில் இறந்த நபர் என்னுடைய கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். 19.11.2018 என்று சமார் 1.00 மணிக்கு மேல் நான் வீட்டில் இருந்தேன். அப்போது என் கணவரை தண்ணீ அடிக்கலாம் வா என்று அவருடைய நண்பர்கள் குறல் கொடுத்தார்கள். அவர்களுடன் களம்பி சென்றுவிட்டார். அரை மணி நேரம் கழித்து சத்தம் வந்தது. அப்போது என் கணவரை அவருடன் வந்த நபர்கள் இரும்பு ராடால் கங்கையம்மன் கோவில் குளக்கரையில் வைத்து அடித்தார்கள். அவர்கள் ஆஜர் எதிரிகள் தான். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள். அப்போழுது நான் வீட்டில் இருந்து போவதற்குள் என் கணவருடன் எங்கள் தெருவில் இருந்த தண்ணீ அடித்த நபர்கள் தான் என் கணவருடன் இருந்தார்கள். மற்றவர்கள் போய் விட்டார்கள். அடித்தவர்கள் ஆட்டோவில் வந்தார்கள். அந்த ஆட்டோ நம்பர் தெரியும். அது. டி.என்.12, ஏ.ஏ. 7686 ஆகும். என் கணவர் இறந்துவிட்டார். என் கணவரின் நண்பர்கள் ஆம்புலஸன்சுக்கு தகவல் கொடுத்தார்கள். போலிசாரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அதற்கு முன் நாள் என்னிடம்

தனக்கு ஆட்டோஸ்டான்டில் பிரச்சனை என்று சொன்னார். என்னை சம்பவத்திடத்தில் இருந்து விசாரணைக்கு போலிசார் அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார்தான். அது அ.த.சா.ஆ.1 ஆகும். என் கணவரை தாக்க பயன்படுத்திய இரும்பு ராடுகள் சா.பொ.1 மற்றும் 2 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>4ம் எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் சம்பவ சமயத்தில் பாரிவாக்கத்தில் உள்ள பீர்பெக்ரியில் வேலைப்பார்தேன். நான் டெம்பரிவரியாக வேலைப்பார்தேன். காலை 8.00 மணிக்கு சென்றால் மாலை 5.45 மணிக்கு வேளியே வருவோம். 1 சிப்ட் தான். 19.11.2018 ல் நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில இருந்தேன். நான் அன்று லீவு. நான் வேலை பார்ப்பது குறித்து போலிஸில் சொல்லவில்லை. 19.11.2018 நான் லீவில் இருந்த விவரத்தை போலிசார் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. என் கணவருக்கு சொந்தமாக ஆட்டோ இல்லை. எப்போதாவது மாதத்திற்கு ஒருமுறை, இருமுறை ஆட்டோ ஓட்ட செல்லவார். என் கணவர் ஒரகடத்தில் இருந்து பாடிகட்டக்கூடிய லாரியை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்க ஓட்டிச்செல்லவார். கல்கட்டாபோன்ற இடத்திற்கு செல்வார். போகும் போது தனியாக தான் செல்வார். என் கணவர் மீது வில்லிவாக்கம் காவல் நிலையத்தல் ஒரு கொலைவழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியும். அவர் இறக்குவதற்கு முன்பு கூட வாய்தாவிற்கு நீதிமன்றம் சென்று வந்தார் என்றால் சரியதான். அந்த குற்ற வழக்கில் கொலையுண்ட நபருக்கும் என் கணவருக்கும் இடையே முன் விரோதம் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. என் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் 5 வீடு தள்ளி உள்ள தூரம் இருக்கும். அந்த கோவில் குளத்திற்கு ஒரு பாட்டை செல்லும் என்றால் சரிதான். அதில் ஆட்டோ போகாது என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டுபோகும் போது என் கணவர் இறந்து கிடந்தார். அவருடைய நண்பர்கள் மட்டும் தான் அருகில் இருந்தார்கள். மற்ற யாரையும நான் பாாக்கவில்லை. நான் சம்பவயிடத்தில் என் கணவரை தாக்கும் போது பார்க்கவில்லை.

அதனால் என் கணவரை யார் யார் தாக்கினார்கள் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். பாலாஜி என்ற நபரை எனக்கு தெரியாது. அவரை சம்பவிடத்திலும் பார்க்கவில்லை. காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்காக தான் எதிரிகளை தெரியும் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவத்தை குறித்து தெரியாது என்பதால் தான் யார்யார் எந்தெந்த இடங்களில் எந்தெந்த ஆயுதங்களால் தாக்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் வேலையில் இருந்ததாலும் சம்வபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் எதனால் தான் புகாரில் முழுவிவரங்களை சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. இந்த சான்று பொருள் தான் சம்பவத்திற்கு பயன்படுத்தியது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றாலும் அது எல்லா இடத்திலும் கிடைக்ககூடியது என்றால் சரியதான். ஆனால் அந்த ராடு இருந்தது. என்னுடைய மனநிலை காரணமாக புகாரை என்னால் எழுதயியலவில்லை. என்னிடம் கேட்டு நான் சொன்னதை எழுதினார்கள் அதில் நான் கையெழுத்து இட்டேன்.

**<u>5ம் எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் 10 வகுப்பு படித்திருக்கிறேன். போலிசார் என்னை ஒரு முறைதான் விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை எந்த சூழ்நிலையுலும் போலிசார் விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. எதிரிகள் பெயரை எவரையும் நான் குறிப்பிட்டுச்சொல்லவில்லை. என் கணவர் தினம்தோறும் யார்யாரை தொடர்புகொள்வர் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் கணவா பெயரில் கொலை வழக்கு தவிர்த்து ஆவடி மற்றும் திருமுள்ளைவாயில் காவல் நிலையத்தில் வழக்குகள் உள்ளன். நான் புகார் கொடுக்கபோகும் போது காவல் நிலையத்திற்கு என்னுடன் யார்யார் அழைத்து சென்றேன் என்ற அந்த நபர்களின் பெயர்களை சொல்லவீல்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து நான் இருக்கும் வீட்டிற்கு குரல் கொடுத்தாலோ கூச்சல் இட்டாலோ கேட்காது. தெருவில் உள்ளவர்கள் சத்தம் போட்டால் கேட்கும். நான் கேள்விபட்டு தான் என் கணவர் இறந்து கிடந்ததை பார்க்கசென்றதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாக்கப்பட்ட இரும்பு ராடுகளின் அளவுகள் எனக்கு தெரியாது. ஜார்ஜ்பாபு என்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது. என் கணருக்கு எற்கனவே கொலை வழக்கு மற்றும் இதர வழக்குகள் சமமந்தமாக முன்விரோம் இருந்ததால் யார் கொலை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் என் கணவா என்பதால் போலிசார் என்னை சாட்சியாக போட்டுவிட்டார் என்றால் சரியல்ல.

1,2,3 மற்றும் 6 எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்குவிசாரணையும் செய்யப்படவில்லை. அ.சா.3ன் சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை இல்லை.